**கவனிக்க.**- 10.05.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1811 - 2013 මැයි මස 17 වැනි වැනි සිකුරාදා - 2013.05.17

1811 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1482 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1488 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1491 |


**கவனிக்க.**- (i) நிதி முகாமைத்துவம் (பொறுப்புகள்) (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) பொருளாதாரச் சேவைகள் விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.**-இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டுப் பகுதிக்கான (யூலை-செத்தெம்பர்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## உடுநுவர பிரதேச சபை

*மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்*

உடுநுவர பிரதேச சபையில் வெற்றிடங்களாகவுள்ள பின்வரும் நிரந்தர அடிப்படையிலான பதவிகளுக்கென ஆட்சேர்ப்பு செய்வதற்காக உரிய தகைமைகளைக் கொண்டுள்ள உடுநுவர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதிவைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வாகன ஓட்டுநர் தரம் III | 01 | ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 பொ. நி. சு. 06/2006 A (IV) PL 3 2006 A சம்பள அளவு 1 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும். (நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | (1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட வாகன ஓட்டுநருக்கான C, CI, D, DI, G தொகுதியின் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>பகல் இரவு காலங்களில் சேவையில் ஈடுபடுவதற்குரிய உடற்தகுதியுடன் சிறந்த கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.<br><br>ஆகக்குறைந்தது 05 அடியாக உயரம் இருத்தல் வேண்டும்.<br><br>வீதிப் போக்குவரத்து பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |
| 02 | மின்சாரத் தொழிலாளர் (தரம் III) | 02 | ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 பொ. நி. சு. 06/2006 (IV) PL 2 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும்.<br><br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | 1. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2. (அ) தொழிலுக்குரிய தேசிய தொழிற் தகைமையின் (NVQ - 2) 2 அல்லது (NVQ-3) 3 ஆம் மட்டச்சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>(ஆ) தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (இ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>(ஈ) இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை (VTA) யில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>(உ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடப் பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>(ஊ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>3. மின் தொழிலாளராக குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 03 | தகனசாலை செயற்பாட்டாளர் (தரம் III) | 01 | ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 பொ. நி. சு. 06/2006 (IV) PL 2 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும்.<br><br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | 1. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2. (அ) தொழிலுக்குரிய தேசிய தொழிற் தகைமையின் 2 (NVQ 2) ஆம் அல்லது 3 ஆம் (NVQ - 3) ஆம் மட்டச்சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>(ஆ) தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>(இ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br>(ஈ) இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை (VTA) யில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (உ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடப் பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>(ஊ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>3. உரிய துறையில் குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 04 | குழாய்க் கிணறு தொழில்நுட்ப வியலாளர் | 01 | ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 பொ. நி. சு. 06/2006 (IV) PL 2 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும்.<br><br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | 1. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2. (அ) தொழிலுக்குரிய தேசிய தொழிற் தகைமையின் (NVQ - 2) 2 அல்லது 3 (NVQ 3) மட்டச்சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>(ஆ) தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>(இ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>(ஈ) இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை (VTA) யில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>(உ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடப் பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (ஊ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருடத் துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>3. உரிய துறையில் குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 05 | ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் (தரம் III) | 01 | ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 பொ. நி. சு. 06/2006 (IV) PL 2 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும்.<br><br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | 1. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகளுடன் 06 பாடங் களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>நாவின்ன/ கெரமினிய/ விக்கிரமாரச்சி ஆயுர் வேத வித்தியாலயத்தில் அல்லது ஆயுர்வேதத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய ஆயுர்வேத மருந்தகத்தில்/ மருத்துவ மனையில் அல்லது வித்தியாலயத்தில் மருந்துக் கலவை பற்றிய ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.<br><br>**அனுபவம்** :<br>ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (பயிற்சிக் காலம் குறைந்தது 02 ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்.) |
| 06 | வீதித் தொழிலாளர் (தரம் III) | 05 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 பொ. நி. சு. 06/2006 (IV) PL 1 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும்.<br><br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | கல்விப் பணிப்பாளர் நாயகம் அங்கீகரித்த பாடசாலை யொன்றிலிருந்து குறைந்தபட்சம் தரம் 8 (ஆண்டு 9) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 07 | சுகாதாரத் தொழிலாளர் (தரம் III) | 06 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 பொ. நி. சு. 06/2006 (IV) PL 1 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும்.<br><br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | கல்விப் பணிப்பாளர் நாயகம் அங்கீகரித்த பாடசாலை யொன்றிலிருந்து குறைந்தபட்சம் தரம் 8 (ஆண்டு 9) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 08 | நூலக உதவியாளர் (தரம் III) | 02 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 பொ. நி. சு. 06/2006 (IV) PL 2 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும். (நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | (1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழியுடன் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 09 | தகனசாலை உதவியாளர் (தரம் III) | 01 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 பொ. நி. சு. 06/2006 (IV) PL 2 2006 A சம்பள அளவு 01 ஆவது ஆரம்ப சம்பளப் படியாகக் கருதப்படும். (நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு) | (1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழியுடன் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

02. **தேவையான ஏனைய தகைமைகள் :**

(1) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர/சமயோசித அடிப்படையில் பணியில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.

(2) விண்ணப்பதாரிகள் வம்சாவழியாகவோ பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து 5 வருட காலம் உடுநுவர பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(5) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(6) அரச/மாகாண அரச அல்லது கூட்டுத்தாபன சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராகவோ பொதுநிர்வாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வுபெற்றவராகவோ இருத்தல் கூடாது.

(7) உடுநுவர பிரதேச சபையில் தற்போது பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(8) விண்ணப்பதாரிகள் பதவிக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

03. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(1) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை.

(2) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(3) நியமனங்கள் 03 வருடகாலம் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும்.

(4) இந்த நியமனங்கள் மாகாண அரச சேவைக்கு உரியதாகும். அத்துடன் நியமனங்கள் குறித்த உள்ளூராட்சி அமையத்துக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டதாகும்.

04. **ஆட்சேர்ப்பு முறை :**

(1) தேவை கருதிப் பொருத்தமானோர் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

(2) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது முதற்பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

- பிறப்புச் சான்றிதழ் ;
- கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

* தமது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் (பிரதேச செயலாளர் வழங்கிய) சான்றிதழ் ;
* தொழில் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் இருப்பின் அவை.

(அரச அல்லது மாகாண அரச சேவை அல்லது உள்ளூராட்சி சேவையில் உள்ளோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.)

3. உரிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

05. **விண்ணப்பப்படிவங்கள்.-**

(1) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு, "செயலாளர், உடுநுவர பிரதேச சபை, கெலிஓய என்ற முகவரிக்கு 2013.06.17 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(3) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும், அல்லது திருத்தியமைக்கும் அறிவிப்பை இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரங்களும் பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

ஆர். எச். எம். ஐ. மெனிகே,
செயலாளர்,
உடுநுவர பிரதேச சபை.

உடுநுவர பிரதேச சபை அலுவலகம்,
கெலிஓய,
29.04.2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உடுநுவர பிரதேச சபை**

மத்திய மாகாண அரச சேவையில் நிலவும் ................................ பதவி

1. (i) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
   (ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. (i) பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
   (ii) 2013.06.17 ஆந் திகதியன்று உள்ளவாறான வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள்:----.
4. ஆண்/பெண் :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
6. நீர் இலங்கைப் பிரசையா? பதிவினாலா அல்லது வம்சாவளியினாலா? :----.
7. கல்வித் தகைமைகள் :----.
8. நீங்கள் தற்போது இந்தச் சபையில் சேவையாற்றுவதாயின் தற்போது வகிக்கும் பதவி, சேவைக்காலம் பற்றிய விபரங்கள் :-----.
9. அனுபவமும் தொழிற் தகைமைகளும் :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின், நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு கட்டுப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவன தலைவரது சான்றிதழ்**

(தற்போது அரச சேவையில் உள்ளோரது விண்ணப்பங்கள் தொடர்பில்)

விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியும் எனவும் இவர் இந்த நிறுவனத்தில் ........................................... ஆகப் பதவி வகிக்கிறார் என்பதையும் சான்றுப்படுத்துகிறேன்.

-----,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

5-448

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**ரிதிமாலியத்த பிரதேச சபை**

சோலைவரி விதித்தல் - 2013

ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2012.12.12 ஆந் திகதிய அமர்வின்போது பிரேரணை இலக்கம் 02-2 சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

வை. எம். கருவீரரத்ன,
தலைவர்,
ரிதிமாலியத்த பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரிதிமாலியத்த,
2013.01.10.

**பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 134 (3) ஆம் பிரிவின்படி ரிதிமாலியத்த பிரதேச சபையின் ஆதிக்கத்திற்குட்பட்டதும் நிரந்தரமாக அல்லது தினந்தோறும் விவசாயம் செய்யப்படுவதும் 1989.04.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்படி குறித்த அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்படி சோலைவரி விதிப்பது தொடர்பாக விசேட பகுதிகளாக ரிதிமாலியத்த பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஒவ்வொரு காணிகளுக்கும் ஹெக்டேயர் என்ற அடிப்படையில் கீழ்க்காட்டியவாறு 2013 ஆம் ஆண்டுக்கான சோலைவரி விதிக்கப்பட வேண்டுமென பிரேரணை பிரேரிக்கப்படுகின்றது.

இந்தச் சோலைவரியானது மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 20, திசெம்பர் 31 ஆகிய தினங்களில் குறித்த காலாண்டுகளுக்கு என்ற அடிப்படையில் அறவிடப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

| காணியின் பரப்பு | ஒரு வருடத்திற்கான வரி<br>ரூபா ச. |
|---|---|
| காணியானது ஹெக்டேயர் 5 இற்கு குறைவானவிடத்து | 50 0 |
| காணியானது ஹெக்டேயர் 5 இற்கு மேற்பட்டபோது | 10 0 |

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(7) ஆம் பிரிவின்படி 2013 ஆம் வருடத்திற்கான வரியானது சனவரி மாதம் 31 ஆந் திகதிக்குமுன் செலுத்தினால் 10 வீதமும் ஒவ்வொரு காலாண்டுக்கு முன்வரும் மாதத்தில் செலுத்தினால் 5 வீதம் கழிவு தரப்படும்.

5-323/1

## ரிதிமாலியத்த பிரதேச சபை

*கடின கழிவுப்பொருட்கள் தொடர்பான தகுதியான துணைச் சட்ட விதிகள்*

*ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2012.12.12 ஆந் திகதிய அமர்வின்படி பிரேரணை இலக்கம் 02-03 இன்கீழ் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

*வை. எம். கருவீரரத்ன,*
*தலைவர்,*
*ரிதிமாலியத்த பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ரிதிமாலியத்த,*
*2013.01.10.*

### பிரேரணை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியோடு வாசிக்கவேண்டிய 261 ஆம் இலக்க அதிகாரத்தினதான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (தகுதியான துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்படி ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டதும் 2012.10.05 ஆந் திகதிய 1778/45 ஆம் இலக்க இலங்கை பிரதேச சபை கடின கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான தகுதியான துணைவிதிகள்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவினோடு வாசிக்கவேண்டியதும், அச்சட்டத்தின் 93 ஆம் பிரிவினோடுகூடிய 126 ஆம் இலக்கப் பிரிவின் 9 ஆம் உப பிரிவின்படி உரித்தாக்கப்பட்ட உரிமங்களின்படி ஏற்று நடைமுறைப்படுத்தவும், இந்த துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் நடைமுறைப்படுத்தவும் ஏற்றுக்கொள்ளவும் மேற்படி உள்ளூராட்சி (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்கீழ் ரிதிமாலியத்த பிரதேச சபை பிரேரணை ஒன்றினை பிரேரிக்கின்றது.*

*இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின் பொருள் கோடல் செய்யும்போது துணைவிதிகளில் குறிப்பிட்ட சபை, தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பகுதி என்ற சொற்கள் மூலமாக ரிதிமாலியத்த பிரதேச சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பிரதேசம் என்பது பொருளாகும்.*

*5-323/2*

---

## ரிதிமாலியத்த பிரதேச சபை

*கொசுக்கள் மற்றும் நோய் பரப்பும் கிருமிகளை அழித்தொழிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளை ஏற்றுக்கொள்ளுதல்*

*ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2013.01.10 ஆந் திகதிய அமர்வின்போது பிரேரணை இலக்கம் 03- 03 இன்கீழ் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

*வை. எம். கருவீரரத்ன,*
*தலைவர்,*
*ரிதிமாலியத்த பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ரிதிமாலியத்த,*
*2013.01.10.*

### பிரேரணை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவோடு வாசிக்கவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1678/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 2010.11.02 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்கள், மற்றும் நோய் பரப்பும் கிருமிகளை அழிப்பது தொடர்பான துணை விதிகள் என்பதாகும். 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவோடு வாசிக்கவேண்டியதும் அந்தச் சட்டத்தின் 93 ஆம்*

பிரிவினதும் 126 ஆம் பிரிவின் 9 ஆம் உப பிரிவின்படி தனக்குரித்தாக்கப்பட்ட உரிமங்களின்படி ரிதிமாலியத்த பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களின் நடைமுறைப்படுத்தவேண்டிய துணைவிதி என இந்தப் பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்த மேற்கூறிய உள்ளூராட்சி மன்ற (துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்படி ரிதிமாலியத்த பிரதேச சபை பிரேரிக்கின்றது.

இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின் பொருள் கோடல் செய்யும்போது துணைவிதிகளில் குறிப்பிட்ட சபை, தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பகுதி என்ற சொற்கள் மூலமாக ரிதிமாலியத்த பிரதேச சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பிரதேசம் என்பது பொருளாகும்.

5-323/3

---

## குருநாகல் பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்தையுடைய பொது மயான பூமி மற்றும் தனியார் மயான பூமி சம்பந்தமான கட்டளைச்சட்டத்தின் II ஆம் பந்தியின் 5 (1) வாக்கியத்தின் கீழ் எடுக்கப்படும் அறிவித்தல்*

வடமேல் மாகாண சபையின் பிரதான அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகிய சட்டத்தரணி அதுல விஜேசிங்க ஆகிய என்னால், குருநாகல் மாவட்டத்தின், குருநாகல் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்திலிருக்கும், பின்வரும் பின்னிணைப்பில் காட்டப்படும் மயான பூமி, பொது மயான பூமி மற்றும் தனியார் மயான பூமி சம்பந்தமாக 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்தையுடைய கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியின் 5 (1) வாக்கியத்தின் கீழ் பிணத்தை புதைத்தல் மற்றும் சுடுதலுக்காக பொதுமயான பூமியாக பிரகடனப்படுத்தப்படுகின்றது.

(சட்டத்தரணி) அதுல விஜேசிங்க,
முதலமைச்சர்,
வடமேல் மாகாண மாகாண சபை.

வடமேல் மாகாண மாகாண சபை,
2013, சித்திரை 19.

**அட்டவணை**

| | மயானத்தின் பெயர் | அமைவிடம் | வரைபடத்தின் இல./திகதி | காணியின் அளவு | எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | மதவ பொது மயானம் | மதவ | 82/2013 2013.03.05 | 0ஏ.03றூ. 24.0பே. | வடக்கே : ரம்புக்கன பிரதான பாதை ;<br>தெற்கே : பகுதிகளாக விற்கும் காணி ;<br>கிழக்கே : 30 அடி அகலமான பாதை ;<br>மேற்கே : 20 அடி அகலமான பாதை. |
| 02 | இந்துல்கொட பொது மயானம் | இந்துல்கொட | 83/2013 2013.03.05 | 0ஏ.02றூ. 10.1பே. | வடக்கே : இல. கு 1315 இற்கான 63 ஆம் இலக்க காணித்துண்டு ;<br>தெற்கே : கட்டுபிட்டிய-மல்லவப்பிட்டிய பாதை ;<br>கிழக்கே : இல. கு 1315 இற்கான 63 ஆம் இலக்க காணித்துண்டு ;<br>மேற்கே : இல. கு 1315 இற்கான 64 ஆம் இலக்க காணித்துண்டு. |
| 03 | மாஸ்பொத்த பொது மயானம் | மாஸ்பொத்த | 95/2013 2013.03.11 | 0ஏ. 3றூ. 8.5பே. | வடக்கே : டபிள்யூ. டீ. அஷோக என்பவர் உரிமை கூறும் காணி ;<br>தெற்கே : குடாகல்கமுவ-புத்தளம் பாதைக்கு செல்லும் பாதை ;<br>கிழக்கே : பிரதேச சபைப் பாதை ;<br>மேற்கே : டபிள்யூ. பீ. நாலக என்பவர் உரிமை கூறும் காணி. |

5-458

# வரவுசெலவுத் திரட்டுக்கள்

**நீர்கொழும்பு மாநகர சபை**

*வரவு செலவுத் திட்டப் பேரேடு - 2013*

*நீர்கொழும்பு மாநகர சபையின் 2013.05.09 ஆந் திகதி நடைபெறவிருக்கும் மாநகர பொதுக் கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டிற்கான 1 ஆவது வரவு செலவுத் திட்டப் பேரேடு பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படவிருப்பதால், அவ்வேடு 2013.05.01 ஆந் திகதியில் இருந்து ஏழு (07) நாட்களுக்கு நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில் பொது மக்கள் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214(பீ) பிரிவின்கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.*

*அன்டனி ஜயவீர,*
*மாநகர முதல்வர்,*
*நீர்கொழும்பு.*

*5-360*

# நானாவித அறிவித்தல்கள்

**கங்க இஹல கோறளே பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரங்களை அமைப்பதன் மீது 2013 ஆம் ஆண்டுக்கெனப் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*ஆர். ஜீ. குணரத்ன ராஜபக்ஸ,*
*தலைவர்,*
*கங்க இஹல கோறளே பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கங்க இஹல கோறளே,*
*13.03.2013.*

**அட்டவணை**

*தொலைத்தொடர்புக் கோபுரம்/அன்ரனா கோபுரம்/தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரம் நிருமாணத்தின் மீது கட்டணம் அறவிடுதல்*

| | | |
|---|---|---|
| 1. அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் | : | 5-20 மீற்றர் உயரம் வரை ரூபா 20,000 அதிகரிக்கும் ஒவ்வொரு மீற்றருக்கும் ரூபா 100 வீதம். |
| 2. தகவுச் சான்றிதழ் வழங்குதல் | : | 5-20 மீற்றர் உயரம் வரை ரூபா 2,000 அதிகரிக்கும் ஒவ்வொரு 5 மீற்றர் உயரத்துக்கும் ரூபா 100 வீதம். |
| 3. உரிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் இன்றி செய்த நிருமாணம்/மீள் நிருமாணம்/ஒரு பகுதியைச் சேர்த்தல் | : | ஒவ்வொரு 5 மீற்றர் உயரத்தின் மீதும் ரூபா 10,000 வீதம். |
| 4. அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்புக் கோபுரம்/அன்ரனா கோபுரம் நிருமாணம்/ தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரம் மீதான வருடாந்தம் செலுத்த வேண்டிய கட்டணம் | : | ரூபா 50,000 |

*5-449*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.